Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 15-04-2026
Deposition of witness for : PW 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | விக்னேஷ் | வயது | : | 24 |
| தந்தை பெயர் | : | ரமேஷ் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | பாரதிதாசன் நகர், விளார் ரோடு, தஞ்சாவூர் | தொழில் | : | டைல்ஸ் வேலை |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 4 produced. Accused 5 to 13 present**

**Ld. D. Counsel not Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. 1348 பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்தோடு வசித்து வருகிறேன். டைல்ஸ்

வேலை செய்து வருகிறேன்.

2) இறந்துபோன சசிக்குமாரை தெரியும். அ.சா.1 முதல் 7 வரை சாட்சிகளை எனக்கு தெரியும்.

3) 8.9.2025 அன்று நானும் பவுல் கிளிக்ன்டன் இருவரும் விளாலில் டைல்ஸ் வேலைக்கு சென்று விட்டு இரவு 8.30 மணிக்கு வீட்டிற்கு வந்தோம். நான் சம்பளம் வாங்குவதற்காக பவுலுக்கு மணிக்கு 10.45 போன் செய்தேன். நியூ பாத்திமா நகர், 5 வது தெருவிற்கு வரசொன்னார். நான் 10.50 மணிக்கு அங்கு செல்லும்போது சத்தம் கேட்டது. அப்போது ஹரிஹரன் வீட்டு அருகில் சத்தம் கேட்டது. அப்போது நான் போய் பார்த்தேன். பிறகு பவுல் அங்கு வந்தார்.

4) சஞ்சய், சக்தி, கோகுல், சபரி, பிரபா, ஹரிஹரன் ஆகியோர் யாரையோ வெட்டி கொலை செய்ய போவதாக கத்தி பேசிக்கொண்டிருந்தார்கள். சசிகுமாரை கொலை செய்யவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். நான் தாண்டி சென்று விட்டேன். நான் சம்பளத்தை வாங்கிவிட்டு இரவு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்

5) மறுநாள் 9.9.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு பவுல் எனக்கு போன் செய்து கலைஞர் நகர் 1 வது தெருவில் யாரையோ கொலை செய்து போட்டு இருப்பதாக சொன்னார்.

6) நானும் பவுல் கிளிண்டனும் போய் பார்த்தபோது அங்கு சசிக்குமாரின் தலையை வெட்டி சிதறி கொலை செய்து இருந்தார்கள். அப்போது சூர்யா, பிரதிப் இருவரும் அழுதுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இருவரும் என் நண்பர்கள்.

7) சிறிது நேரத்தில் சசிக்குமாரின் தாயார் விஜயா மற்றும் அவரது அக்கா காவ்யா இருவரும்

சம்பவ இடத்திற்கு வந்தார்கள். அப்போது சூர்யா அழுதுக்கொண்டே விஜயாவிடம் சசியை கொலை செய்து விட்டார்கள் என்று சொன்னார். அப்போது விஜயா யாருடா என்று கேட்டபோது சூர்யா அவர் அம்மாவிடம் சஞ்சய், சக்தி, கோகுல், சபரி, ஹரிஹரன், பிரபா ஆகியோர் வெட்டி கொலை செய்துவிட்டதாக சொன்னார்.

8) அதற்கு பிறகு 108 ஆம்புலன்ஸ் வந்து இறந்த சசிக்குமாரை மருத்துவகல்லூரி மருத்துவமணைக்கு ஏற்றி சென்றார்கள். அப்போது போலிசார் விசாரித்தார்கள். அவர்களிடம் நேற்று இரவு சஞ்சய், சக்தி, கோகுல், சபரி, ஹரிஹரன், பிரபா ஆகியோர்கள் சசியை கொலை செய்யபோவதாக பேசிக்கொண்டிருந்த விபரத்தை நான் சொன்னேன்.

9) இது பற்றி என்னை போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராத காரணத்தினால் அவர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதும் இல்லை என முடிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.15 14:58:07 +0530